எஸ்.டி.சி எண். 281/2022 தேதி: 23.01.2025

<u>ம.சா.1 ஆன திரு. ந. சதிஷ்குமார் என்பவர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

நான் வட்டிக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை. நான் எனது புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் எதிரி என்வசம் ரூபாய். 2,40,000/- கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் எதிரி எனக்கு கொடுக்க வேண்டிய தொகையில் பகுதி தொகையாக ரூபாய். 2,40,000/- த்தை சிறுக சிறுக கொடுத்தார். மேற்கண்ட தொகையை எதிரி என்வசம் Gpay மூலமாகவும் கைப்பணமாகவும் செலுத்தியுள்ளார், நான் கைப்பணமாக வாங்கிய தொகைக்கு ரசீது ஏதேனும் வழங்கினேனா என்றால் இல்லை. எதிரியை தவிர நான் வேறு யாருக்கும் பணம் கொடுத்துள்ளேன் என்றால் எனக்கு அவ்வாறு பழக்கம் எதுவும் இல்லை. 18.03.2021 ஆம் தேதியன்று மொத்தமாக எதிரிக்கு ரூ. 7,50,000/- கடன் கொடுத்தேன். எதிரி அவருடைய business ல் என்னையும் investment partner ஆக சேர்த்துக் கொள்வதாக கூறி பணம் பெற்றார். எதிரி ஏற்கனவே நடத்தி வந்த தொழிலில் தான் என்னை investment partner ஆக சேர்த்துக் கொண்டார். நான் எனது வீட்டினை விற்று வைத்திருந்த பணத்தை தான் எதிரிக்கு கொடுத்தேன். நான் சுமார் 9,50,000/- ரூபாய் வங்கியில் கடன் செலுத்தினேன். மேற்கண்ட சங்கதி குறித்த ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் எனது வங்கியின் கணக்கு குறிப்பில் அது காணப்படும். நான் மேலே குறிப்பிட்டது போல் எனக்கு வருவாய் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வருமான வரி தாக்கல் செய்யவில்லை. வருமான வரி தாக்கல் செய்யும் அளவிற்கு வருமானம் இல்லை என்று சொன்னால் சரிதான். நான்

**சொல்வதுபோல் எதிரிக்கு மேற்கண்ட தொகையான ரூபாய்.** 7,50,000/- **த்தை தவிர எங்களுக்குள் எந்த பரிவர்த்தனையும் இல்லை.**

(**எதிரி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது**).

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.

// True copy //

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.